மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

வட ஆற்காடு ஜவ்வாது மலை ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம்.

271—(*வினா எண் 9619) திரு. எஸ். பி. மணவாளன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு ஜவ்வாது மலை ஊராட்சி ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் ஜவ்வாது மலை ஊராட்சி ஒன்றியத்தில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிம்மியம்பட்டியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் நிறுவ அரசு ஆணையிட்டிருக்கிறது.

திரு. எஸ். பி. மணவாளன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 28.3.1986 ஆம் தேதியிட்ட, 692 அரசு ஆணை பிரகாரம் ஜவ்வாது மலையில் ஜமுனா மருதூர், புதூர் ஆகிய 2 மருந்தகங்களை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்ற அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு உள்ளது. ஆனால் அமைச்சர் அவர்கள் நிம்மியம்பட்டியில் மட்டும் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க அரசு ஆணையிட்டுள்ளது என்று தெரிவித்து இருக்கிறார்கள். எனவே இதைப் பற்றி விவரம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வி, 'ஜவ்வாது மலை ஊராட்சி ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்படுமா' என்பதாகும். அதற்கு நான், வட ஆற்காடு மாவட்டம் ஜவ்வாது மலை ஊராட்சி ஒன்றியத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிம்மியம்பட்டியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் நிறுவ அரசு ஆணையிட்டிருக்கிறது என்று சொன்னேன். மற்ற விவரங்களைப் பற்றி கேட்கிறார்கள். அவைகளைப் பற்றி தனியாக எழுதிக் கொடுப்பார்களானால், விவரம் சேகரித்துத் தருகிறேன்.

திரு. எஸ். பி. மணவாளன்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணை வெளியிட்டு ஒரு வருடத்திற்கு மேலாகியும், இந்த அரசு ஆணையை செயல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக மலைவாழ் மக்களுக்கு அங்கே போதிய பஸ் வசதி இல்லாத காரணத்தால், அவர்கள் மருத்துவ வசதி பெறக்கூட செல்ல முடியாமல், நோயாளிகளாக இறந்துவிடக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதைக் கருத்திலே கொண்டு, உடனடியாக ஆரம்ப சுகாதார நிலையங்களை செயல்படுத்துவதற்கு அரசு முன்வருமா?

1987 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றை ஆரம்பிக்கவேண்டும் என்று சொன்னால், 10 ஆயிரம் ரூபாய் நன்கொடையாகத் தரவேண்டும். 5 ஏக்கர் நிலம் தரவேண்டும். இவைகளைத் தந்திருக்கிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இவைகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன என்று நான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்த உத்தரவைப் பற்றிய விவரம் என்னிடம் தற்போது இல்லை. தனியாக இதுபற்றி எழுதிக் கொடுப்பார்களேயானால், பரிசீலித்து தகவல் சொல்கிறேன்.

திரு. கூடலூர் இ. வி. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று சொன்னால், அதற்கு 10 ஆயிரம் ரூபாய் பணம் கட்டவேண்டும், 5 ஏக்கர் நிலம் தரவேண்டும என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆதி திராவிட மக்கள், குறிப்பாக பழங்குடி மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் இதுபோன்று இடங்கள் கிடைப்பது என்பதும், பணம் கட்டுவது என்பதும் அவ்வளவு எளிதல்ல. காரணம் அவர்கள் மிகவும் ஏழைகள், மிகவும் பிற்பட்ட பகுதியாக அந்த இடங்கள் இருக்கின்றன. எனவே இதுபோன்ற இடங்களுக்கு, விதிகளில் சலுகை அளித்து, பணம் கட்டத் தேவையில்லை, அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் என்று அரசு அறிவிக்குமா? குறிப்பாக ஜமுனாமருதூரிலே ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஜமுனா மருதூரைப் பற்றி அவர்களுக்குத் தெரியும். நான் வாழ்கின்ற தண்டராம்பட்டு தொகுதியில் 17 கிராமங்களில் மலைவாழ் மக்கள் வாழ்கின்றார்கள். இதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஏன் என்றால், அவர்கள் பாதம் படாத இடங்கள் கிடையாது. எனவே அந்தப் பகுதியில், அரசாங்கமே முழுப் பொறுப்பை ஏற்று, ரெட்டியார் பாளையத்தைத் தலைமையிடமாகக் கொண்டு அங்கே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கவேண்டும் என்றால், 30 ஆயிரம் மக்கள் தொகை இருக்கவேண்டும், 10 ஆயிரம் ரூபாய் பணமும், 5 ஏக்கர் நிலமும் தரவேண்டும் என்பது மட்டுமல்ல, 8 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு எந்த ஒரு மருத்துவமனையும் இல்லாதிருக்க வேண்டும் என்று அந்த விதிகளில் விதிக்கப்பட்டிருக்கிறது. எனவே அந்த விதிகளுக்கு உட்பட்ட இடங்களில்தான் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை ஆரம்பிக்கும். இதுதான் இந்திய அரசாங்கத்தினுடைய முறையாகும்.

LEGISLATIVE ASSEMBLY ... WITH ALONE TRIUMPHS

1987 ஏப்ரல் 3]

திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியது போன்று, என்னுடைய தொகுதியில் உள்ள மூலனூர் ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கிற மூலனூரில் இருக்கிற பி.எச். சென்ட்ரை அப்கிரேட் பண்ண வேண்டும் என்று கேட்டோம். அவர்கள் சொல்கின்றபடி நாங்கள் ஏற்கனவே பணம் எல்லாம் கட்டி, தயாராக இருக்கிறோம். எனவே அரசு இதை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 140 ஆரம்ப சுகாதார நிலையங்களை ஆரம்பிக்க இருப்பதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் கீழ் இவைகள் எல்லாம பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் மொரப்பூர் தொகுதியில் பாப்பாரப்பட்டி வட்டாரத்திலே உள்ள பூதநத்தம் என்ற கிராமத்திலே, 1981—82-லே அரசாங்க விதிமுறைகளுக்கு உட்பட்டு, 5 ஏக்கர் நிலமும், 10 ஆயிரம் ரூபாயும், டெபாசிட்டாக அந்தப் பகுதி பொதுமக்களால் செலுத்தப்பட்டு இருக்கிறது. இப்படி அரசு நிபந்தனைக்கு உட்பட்டு, 1982-லேயே பணம் எல்லாம் கொடுக்கப்பட்டது. அந்த இலாக்கா அதிகாரிகள் கூட இதற்காக சிபாரிசு செய்து, அரசின் அனுமதிக்காக அனுப்பியிருக்கிறார்கள், பரிந்துரை செய்திருக்கிறார்கள். எனவே இப்படிப்பட்ட அந்த சென்ட்டரை இடங்களில் அமைக்க அரசு அனுமதி வழங்க உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்

(முற்பகல் 10.40)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்ததைப் போல 140 ஆரம்ப சுகாதார நிலையங்களை இந்த ஆண்டு துவக்க இருக்கிறோம். அதிலே இவைகள் எல்லாம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். எங்கெங்கு பணம் கொடுக்கப்பட்டு இருக்கிறதோ, இடம் கொடுக்கப்பட்டு இருக்கிறதோ, அவைகள் எல்லாம் கருத்தில் கொள்ளப்படும்.

பாப்பாரப்பட்டி மருத்துவமனையை வேறு இடத்திற்கு மாற்றுதல்.

272—(*வினா எண். 9637) திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாப்பாரப்பட்டியில் இருக்கும் மருத்துவமனை வேறு வசதியான இடத்திற்கு மாற்றப்பட்டு விரிவுபடுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது செயல்படுத்தப்படும்?